# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# ஒன்பதாம் பத்து

## ஐந்தாம் திருவாய்மொழி - இன்னுயிர்ச்சேவல்
## நெஞ்சில் கண்ட நாயகனை நேரில் காண ஆசைப்பட்ட பராங்குச நாயகி, அவனை நினைவிக்கும் பொருள்களால் தான் தளர்ந்தமை கூறுதல்

** இன் உயிர்ச் சேவலும் நீரும் * கூவிக் கொண்டு இங்கு எத்தனை *
என் உயிர் நோவ மிழற்றேல்மின் * குயில் பேடைகாள்! **
என் உயிர்க் கண்ண பிரானை * நீர் வரக் கூவுகிலீர் *
என் உயிர் கூவிக் கொடுப்பார்க்கும் * இத்தனை வேண்டுமோ? 1

இத்தனை வேண்டுவது அன்று அந்தோ! * அன்றில் பேடைகாள்! *
எத்தனை நீரும் நும் சேவலும் * கரைந்து ஏங்குதிர் **
வித்தகன் கோவிந்தன் * மெய்யன் அல்லன் ஒருவர்க்கும் *
அத்தனையாம் இனி * என் உயிர் அவன் கையதே 2

அவன் கையதே எனது ஆருயிர் * அன்றில் பேடைகாள்! *
எவம் சொல்லி நீர் குடைந்து ஆடுதிர் * புடை சூழவே **
தவம் செய்திலா * வினையாட்டியேன் உயிர் இங்கு உண்டோ? *
எவம் சொல்லி நிற்றும்? * நும் ஏங்கு கூக்குரல் கேட்டுமே 3

கூக்குரல் கேட்டும் * நம் கண்ணன் மாயன் வெளிப்படான் *
மேற் கிளை கொள்ளேன்மின் * நீரும் சேவலும் கோழிகாள்! **
வாக்கும் மனமும் * கருமமும் நமக்கு ஆங்கதே *
ஆக்கையும் ஆவியும் * அந்தரம் நின்று உழலுமே 4

அந்தரம் நின்று உழல்கின்ற * யானுடைப் பூவைகாள்! *
நும் திறத்து ஏதும் இடை இல்லை * குழறேன்மினோ **
இந்திர ஞாலங்கள் காட்டி * இவ்வேழுலகும் கொண்ட *
நம் திருமார்பன் * நம் ஆவி உண்ண நன்கு எண்ணினான் 5

நன்கு எண்ணி நான் வளர்த்த * சிறு கிளிப் பைதலே! *
இன் குரல் நீ மிழற்றேல் * என் ஆருயிர்க் காகுத்தன் **
நின் செய்ய வாய் ஒக்கும் வாயன் * கண்ணன் கை காலினன் *
நின் பசுஞ்சாம நிறத்தன் * கூட்டுண்டு நீங்கினான் 6

கூட்டுண்டு நீங்கிய * கோலத் தாமரைக் கண் செவ்வாய் *
வாட்டமில் என் கரு மாணிக்கம் * கண்ணன் மாயன் போல் **
கோட்டிய வில்லொடு * மின்னு மேகக் குழாங்கள்காள்! *
காட்டேன்மின் நும் உரு * என் உயிர்க்கு அது காலனே 7

உயிர்க்கு அது காலன் என்று * உம்மை யான் இரந்தேற்கு * நீர்
குயிற் பைதல்காள்! * கண்ணன் நாமமே குழறிக் கொன்றீர் **
தயிர்ப் பழஞ்சோற்றொடு * பால் அடிசிலும் தந்து * சொல்
பயிற்றிய நல் வளம் ஊட்டினீர் * பண்பு உடையீரே! 8

பண்புடை வண்டொடு தும்பிகாள்! * பண் மிழற்றேல்மின் *
புண் புரை வேல் கொடு * குத்தால் ஒக்கும் நும் இன் குரல் **
தண் பெரு நீர்த் தடந்தாமரை * மலர்ந்தால் ஒக்கும்
கண் பெருங் கண்ணன் * நம் ஆவி உண்டு எழ நண்ணினான் 9

எழ நண்ணி நாமும் * நம் வான நாடனோடு ஒன்றினோம் *
பழன நன்னாரைக் குழாங்கள்காள்! * பயின்று என் இனி? **
இழை நல்ல ஆக்கையும் * பையவே புயக்கற்றது *
தழை நல்ல இன்பம் தலைப்பெய்து * எங்கும் தழைக்கவே 10

** இன்பம் தலைப்பெய்து எங்கும் தழைத்த * பல் ஊழிக்கு *
தன் புகழ் ஏத்தத் * தனக்கு அருள் செய்த மாயனை **
தென் குருகூர்ச் சடகோபன் * சொல் ஆயிரத்துள் இவை *
ஒன்பதோடு ஒன்றுக்கும் * மூவுலகும் உருகுமே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---